# சிக்குபுக்கு தெலுங்கில் லவ் டு லவ்...

கோச்சடையான் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் படத்தை தயாரிக்கும் மீடியா ஒன் க்ளோபல் நிறுவனம் தயாரித்த தமிழில் ஆர்யாவின் ஹாட்ரிக் வெற்றியான சிக்கு புக்கு இப்போது தெலுங்கில் வெளியாகிறது...தெலுங்கு உரிமையை மனதேசம் மூவீஸ் அசோக் வல்லபநேனி வாங்கியுள்ளார்...லவ் டு லவ் என்று பெயரிடப்பட்டுள்ளது.

மே மாதம் நான்காம் தேதி ஹைதராபாத்தில் ஆடியோ வெளியீடு நடைபெறவிருக்கிறது...இவ்விழாவில் ஆர்யா, ஸ்ரேயா, ப்ரீதிகா, இசை அமைப்பாளர்கள் ஹரிஹரன் லெஸ்லி, இயக்குனர் கே.மணிகண்டன் கலந்துகொள்கின்றனர்...

படத்தின் வசனத்தை சஷாங் வென்னிலகண்டி எழுதியுள்ளார்...பாடல்களை சந்திரபோஸ், புவனசந்திரா, வென்னிலகண்டி, சஷாங் வென்னிலகண்டி ஆகியோர் எழுதியுள்ளனர். தமிழில் பாடிய பாடகர்களான ஹரிஹரன், சங்கர் மகாதேவன், அட்னான் சாமி, சுஜாதா, பென்னி தயாள், ராகுல் நம்பியார், தெலுங்கிலும் பாடியுள்ளனர்.

படத்தின் பாடல்களை தினேஷ் மற்றும் ரேகா சின்னிப்ரகாஷ் நடனம் அமைத்துள்ளனர்...

ஜூன் மாத முதல்வாரத்தில் ஆந்திரா முழுதும் வெளியிட தீர்மானித்துள்ளனர்...

தற்போது இயக்குனர் கே.மணிகண்டன், கனடாவின் துயில் விருது பெற்ற எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் அவர்களுடன் ஆலோசித்து மூன்று கதைகளை எழுதி முடித்து முன்னணி கதாநாயகர்களுடன் பேசிவருகிறார்...இன்னும் ஓரிரு வாரங்களில் செய்தி வெளியாகும்...